பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

25 12 2024 **WEDNESDAY** 7 15 **PM**

தலைப்புச் செய்திகள்

1. ஜல்சக்தி திட்டத்தை நிறைவேற்றுவதற்கு அரசியல் சாசன சிற்பி அம்பேத்கரின் தொலைநோக்கு பார்வையே காரணம் என பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.
2. உள்நாட்டு பாதுகாப்பை உறுதி செய்வதில், மத்திய ரிசர்வ் காவல்படையினரின் பங்கு முக்கியமானது என்று உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.
3. முன்னாள் பிரதமர் அடல்பிஹாரி வாஜ்பேய் ஆட்சிக்காலத்தில், இந்தியா எட்டு புள்ளி நான்கு சதவீத வளர்ச்சியை எட்டியதாக பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.
4. அரசு திட்டங்களின் பலன் கடைக்கோடியில் உள்ள மக்களையும் சென்றடைந்தால் தான், வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க முடியும் என்று மத்திய இணையமைச்சர் திரு. எல். முருகன் கூறியுள்ளார்.
5. கஜகஸ்தானில் பயணிகள் விமானம் விபத்துக்குள்ளானதில் 30-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

**>>>>><<<<<**

அரசியல் சாசன சிற்பி அம்பேத்கரின் தொலைநோக்கு பார்வையின் அடிப்படையிலேயே மத்திய அரசு ஜல்சக்தி திட்டத்தை நிறைவேற்றி வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

மத்தியப்பிரதேச மாநிலம், கஜூராஹோவில் **Ken-Betwa** நதிநீர் இணைப்பு திட்டத்திற்கு அடிக்கல் நாட்டி அவர் உரையாற்றினார்.

தண்ணீர் பற்றாக்குறை வருங்காலத்தில் பெரும் சவாலாக இருக்கும் என்று கூறிய பிரதமர், நாட்டின் வளர்ச்சிக்காக அம்பேத்கர் தெரிவித்த யோசனைகளை முந்தைய காங்கிரஸ் அரசு புறக்கணித்ததோடு, அவரது சாதனைகளையும் மறைத்து விட்டதாக குற்றம் சாட்டினார்.

பஞ்சாயத்து முதல் நாடாளுமன்றம் வரை ஆட்சிப் பொறுப்பில் இருந்த காங்கிரஸ் கட்சி, நாடு சுதந்திரம் அடைந்து 70 ஆண்டுகளுக்கு மேலாகியும் மாநிலங்களுக்கு இடையேயான நதிநீர் பிரச்சினைகளுக்கு தீர்வு காண எந்த முயற்சியும் எடுக்கவில்லை என்று அவர் தெரிவித்தார்.

காங்கிரஸ் மற்றும் இடதுசாரிகள் ஆட்சி நடத்திய மாநிலங்களை விட பிஜேபி ஆட்சி நடத்தும் மாநிலங்கள், மக்கள் நலன் மற்றும் வளர்ச்சியில் பெரும் வெற்றி பெற்றிருப்பதாக அவர் கூறினார்.

பிஜேபி அரசு மக்கள் நலனுக்காக எந்த அளவிற்கு அர்ப்பணிப்புடன் பாடுபடுகிறது என்பதை இந்த நாடு பார்த்துக் கொண்டிருப்பதாகவும் பிரதமர் குறிப்பிட்டார்.

சுதந்திரப் போராட்ட வீரர்களின் கனவுகளை நனவாக்க, அல்லும் பகலும் அயராது பாடுபட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் பெயரளவுக்கு தான் திட்டங்கள் தொடங்கப்பட்டதே தவிரை, அவை முழுமையாக செயல்படுத்தப்படவில்லை என்றும் பிரதமர் கூறினார்.

>>>>><<<<<

உள்நாட்டு பாதுகாப்பு மற்றும் அமைதியை உறுதி செய்வதில், மத்திய ரிசர்வ் காவல்படை முக்கியப் பங்கு வகிப்பதாக உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

புதுதில்லியில் உள்ள இந்தப் படையின் தலைமை அலுவலகத்திற்கு சென்ற அவர், அதன் செயல்பாடுகள் குறித்து மூத்த அதிகாரிகளுடன் ஆய்வு செய்தார்.

அப்போது பேசிய அவர், நக்ஸலைட்டு தீவிரவாதத்தை ஒடுக்குவதிலும், வடகிழக்கு மாநிலங்கள் மற்றும் ஜம்மு காஷ்மீரில் ஸ்திரத்தன்மையை மீட்டெடுப்பதிலும் மத்திய ரிசர்வ் காவல்படையினரின் பணி பாராட்டத்தக்கது என்றார்.

வீரர்களின் சிறந்த ஆரோக்கியத்திற்கு சிறுதானிய உணவுகளை அதிக அளவில் பயன்படுத்த வேண்டும் என்றும் திரு. அமித் ஷா வலியுறுத்தினார்.

>>>>><<<<<

முன்னாள் பிரதமர் அடல்பிஹாரி வாஜ்பேய் ஆட்சிக்காலத்தில், இந்தியா எட்டு புள்ளி நான்கு சதவீத வளர்ச்சியை எட்டியதாக பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

லக்னோவில் நடைபெற்ற வாஜ்பேய் நூற்றாண்டு விழாவில் பேசிய அவர், வாஜ்பேய் ஆட்சிக்காலம், நாட்டின் பொருளாதார வரலாற்றில் ஒரு மைல்கல் என்றார்.

அவரது தொலைநோக்குடன் கூடிய உள்ளடக்கிய வளர்ச்சிக்கான ஆளுமை பண்புகள் உலக அளவில் பாராட்டப்பட்டதாகவும் அவர் கூறினார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான தற்போதைய ஆட்சியில், தேவையற்ற பழங்கால சட்டங்கள் ஒழிக்கப்பட்டதன் மூலம், எளிதாக தொழில் தொடங்குவதற்கு உகந்த நாடுகளின் பட்டியலில் இந்தியா 50வது இடத்திற்கு முன்னேறியிருப்பதாகவும் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்தார்.

>>>>><<<<<

அடிமட்ட அளவில் நிர்வாகத்தை வலுப்படுத்துவதற்கான வளர்ச்சியடைந்த பஞ்சாயத்து கர்மயோகி திட்டத்தை மத்திய பணியாளர் நலத்துறை இணையமைச்சர் திரு. ஜிதேந்திர சிங் இன்று தொடங்கி வைத்தார்.

நல்லாட்சி தினத்தை ஒட்டி புதுதில்லியில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அதிகாரிகளுக்கு போதிய பயிற்சி அளிப்பதன் மூலம், பஞ்சாயத்துகளின் திறமையை மேம்படுத்தி போட்டித் திறனை அதிகரிக்க முடியும் என்றார்.

நல்லாட்சிக்கான சீர்திருத்தங்கள் அடிமட்ட அளவிலிருந்து மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திய திரு. ஜிதேந்திர சிங், புதிதாக தொடங்கப்பட்டுள்ள கர்மயோகி திட்டம், கிராமப் பகுதிகளை வளர்ச்சியின் பிரதான நீரோட்டத்துடன் இணைக்கும் என்றும் தெரிவித்தார்.

**>>>>><<<<<**

நாட்டின் 100வது சுதந்திர தின விழா கொண்டாடப்படும் வேளையில், 30 டிரில்லியன் டாலர் பொருளாதாரம் கொண்ட நாடாக உருவெடுக்கும் திறன் இந்தியாவுக்கு உள்ளதாக நித்தி ஆயோக் அமைப்பின் முன்னாள் தலைமைச் செயல் அதிகாரி திரு. அமிதாப் காந்த் கூறியுள்ளார்.

பாட்னா ஆளுநர் மாளிகையில் நடைபெற்ற நல்லாட்சி தின விழாவில், சிறப்பு விருந்தினராக பங்கேற்று அவர் உரையாற்றினார்.

இந்தியாவை வளர்ச்சியடைந்த நாடாக மாற்ற, மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதத்தை 9 மடங்கு அதிகரிப்பதுடன், தனிநபர் வருமானத்தை 8 மடங்காகவும், உற்பத்தி திறனை 16 மடங்காகவும் உயர்த்துவது அவசியம் என்று திரு. அமிதாப் காந்த் குறிப்பிட்டார்.

**>>>>><<<<<**

அரசு திட்டங்களின் பலன் கடைக்கோடியில் உள்ள மக்களையும் சென்றடைந்தால் தான், வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க முடியும் என தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு. எல். முருகன் கூறியுள்ளார்.

ஜார்க்கண்ட் மாநிலம், **Palamu** மாவட்டம், **Daltolganj** பகுதியில் உள்ள ஆகாஷ்வாணி மற்றும் தூர்தர்ஷன் நிலையங்களை இன்று பார்வையிட்ட அவர், ஆகாஷ்வாணி நிலையத்திலிருந்து வானொலி நேயர்களுடன் கலந்துரையாடினார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு, ஆகாஷ்வாணி, தூர்தர்ஷன் வாயிலாக மக்களுக்கு சிறந்த நிகழ்ச்சிகளை ஒலிபரப்ப உறுதிபூண்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

மேலும், **BIND** திட்டத்தின் கீழ், வானொலி மற்றும் தொலைக்காட்சி நிலையங்களை அரசு மேம்படுத்தி வருவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இந்தியாவின் தகவல் தொடர்பு கட்டமைப்பில் ஆகாஷ்வாணி முக்கிய இடம் பெறுவதாகவும், சமுதாயத்திற்கு அதிகாரமளிப்பதுடன் மாற்றத்தை ஏறபடுத்தக்கூடிய திட்டங்கள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதிலும் சிறந்து விளங்குவதாக திரு. எல். முருகன் தெரிவித்தார்.

>>>>><<<<<

குடியரசு தினம் உள்ளிட்ட தேசிய விழாக்கள் பற்றிய தகவல்களை அனைவரும் அறிந்து கொள்ளும் வகையில் **Rashtraparv** வலைதளம் மற்றும் செல்ஃபோன் செயலியை பாதுகாப்புத்துறை செயலாளர் திரு. ராஜேஷ்குமார் சிங் இன்று தொடங்கி வைத்தார்.

புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசிய அவர், குடியரசு தின அணிவகுப்பில் பங்கேற்கும் வீரர்களின் பாசறை திரும்புதல், சுதந்திர தினம் போன்ற விழாக்களை இந்த இணையதளம் மற்றும் செல்ஃபோன் செயலிகளில் நேரலையாக காண்பதுடன் இதில் பங்கேற்பதற்கான அனுமதி டிக்கெட்டுகளையும் பெற முடியும் என்றார்.

மேலும், மாநில அரசுகள் மற்றும் மத்திய அமைச்சகங்கள் சார்பில் குடியரசு தின அணிவகுப்பில் இடம்பெறும் அலங்கார ஊர்தி குறித்த விவரங்களையும் இந்த வலைதளத்தில் அறிந்து கொள்ளலாம் என்று திரு. ராஜேஷ்குமார் சிங் தெரிவித்தார்.

>>>>><<<<<

தேசிய ஜனநாயக கூட்டணி கட்சித் தலைவர்களின் ஆலோசனைக் கூட்டம், புதுதில்லியில் இன்று பிஜேபி தலைவரும், மத்திய அமைச்சருமான திரு. ஜெபி. நட்டா தலைமையில் நடைபெற்றது.

இதில் உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, தெலுகு தேசம் கட்சித் தலைவர் திரு. சந்திரபாபு நாயுடு, மதச்சார்பற்ற ஜனதா தள கட்சியின் திரு. குமாரசாமி, ஐக்கிய ஜனதா தள கட்சியின் திரு. ராஜீவ்ரஞ்சன் சிங், அப்னாதள் கட்சியின் திருமதி. அனுப்ரியா பட்டேல் உள்ளிட்ட தலைவர்கள் பஙகேற்றனர்.

இந்தக் கூட்டத்தில், கூட்டணி கட்சிகளுக்கு இடையேயான ஒருங்கிணைப்பை வலுப்படுத்துவது குறித்து விவாதிக்கப்பட்டதாக தெரிகிறது.

>>>>><<<<<

அஸ்ஸாமில் இரண்டு தீவிரவாதிகள் கைது செய்யப்பட்டதன் காரணமாக, அம்மாநிலத்தில் நடத்தப்படவிருந்த பெரும் தாக்குதல் முயற்சி முறியடிக்கப்பட்டுள்ளது.

அம்மாநில சிறப்பு அதிரடிப் படையினர் கோக்ரஜார் மாவட்டத்தில் நேற்று இரவு மேற்கொண்ட ஆப்பரேசன் பிரகத் என்ற பெயரிலான தேடுதல் வேட்டையின் போது, பெருமளவிலான ஆயுதங்கள் மற்றும் வெடிபொருட்கள் கைப்பற்றப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட தீவிரவாதிகள், சர்வதேச தீவிரவாத அமைப்புகளுடன் தொடர்பு வைத்துள்ளதாக சந்தேகிக்கப்படுகிறது.

>>>>><<<<<

நடப்பு நிதியாண்டின் முதல் அரையாண்டு காலத்தில் வெளிநாடு வாழ் இந்தியர்களின் சேமிப்பு 11 புள்ளி ஒன்பது பில்லியன் டாலர் அளவிக்கு அதிகரித்துள்ளதாக ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது.

இது, கடந்த ஆண்டின் இதே காலகட்டத்தை விட, 6 புள்ளி ஒரு பில்லியன் டாலர் அதிகமாகும்.

கடந்த அக்டோபர் மாதம் வரையிலான காலத்தில், வெளிநாடு வாழ் இந்தியர்களின் மொத்த சேமிப்பு 162 புள்ளி ஏழு பில்லியன் டாலராக உள்ளது என்றும் ரிசர்வ் வங்கியின் சமீபத்திய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

கஜகஸ்தானின் **Aktau** விமான நிலையம் அருகே பயணிகள் விமானம் விபத்துக்குள்ளானதில் 30-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

62 பயணிகள் மற்றும் ஐந்து ஊழியர்களுடன் அஜர்பைஜான் நாட்டின் **Baku** –விலிருந்து ரஷ்யாவின் **Grozny** க்கு சென்று கொண்டிருந்த இந்த விமானம், பனிமூட்டம் காரணமாக கஜகஸ்தானின் **Aktau** அருகே அவசரமாக தரையிறங்க முற்பட்டபோது, தரையில் மோதி தீப்பற்றியது.

இந்த விபத்தில் 32 பேர் உயிர் பிழைத்திருப்பதாக கஜகஸ்தான் அதிகாரிகளை மேற்கோள் காட்டி சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

>>>>><<<<<

அஹமதாபாதில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் வைஷ்ணவி அட்கர் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் 6-1, 6-3 என்ற செட்கணக்கில் லக்ஷ்மி பிரபாவை வென்றார்.

இப்போட்டியின் ஒற்றையர் பிரிவில் சீல் தேசாய், ராஜேஸ்வரன் ரேவதி, அகான்ஷா திலிப் ஆகியோரும் காலிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

>>>>>END<<<<<